**இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் - 2020**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள், கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பா ் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்.எல்.ஏயூ.எஸ்.எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள ் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன், முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்குரிய விடயங்களை வெளிப்படுத்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரிசோதிக்கும் பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி, உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு

அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும

- வளங்கள ˙கால வரையறைகளினுள்ளேயும ˙பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புரைடய உள்ளகக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனம் விற்பனை செய்த மரமுந்திரிகையை திருப்பி அனுப்புதலுக்காக அச்சிட்ட செலவுப் பத்திரம் (தொடர் இலக்கத்துடன்) அல்லது அதற்காக பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டினுள் ஒரு வாடிக்கை நிறுவனத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பிய ரூபா 1,058,542 பெறுமதியான மரமுந்திரிகை இருப்பொன்றிற்காக செலவுப் பத்திரமாக குறிப்பிட்டு இரண்டு கடிதங்கள் விநியோகித்து அவற்றை ஏற்றிருந்தது. விற்பனை திருப்பி அனுப்புதல் திருப்பிஏற்பு நிபந்தனைகள் மற்றும் அத்திருப்பி அனுப்புதல்களிற்கான காரணம் குறிப்பிட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | தொடரிலக்கத்துடன் கூடிய அச்சிட்ட செலவுப் பத்திரத்தை பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தோல் மரமுந்திரிகை, மரமுந்திரிகை விதை மற்றும் மரமுந்திரிகை கன்றுகளின் அலகுக் கிரயத்தினை கணிப்பீடு செய்யும் நடைமுறையொன்று உருவாக்கப்பட்டு இருக்காமையினால் கூட்டுப் பெறுமதி ரூபா 58,041,012 ஆன இறுதி இருப்பு பெறுமதியை கணக்கிட்ட முறையை கணக்காய்வின் போது பரிசோதிக்க முடியவில்லை. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | உற்பத்தி கிரயத்தை கணக்கிட ஒழுங்கான முறையொன்றை அறிமுகஞ் செய்ய வேண்டும். |

**1.5.2 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியிருக்காமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 38 ஆம் பிரிவு பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 82,027,363 ஆன ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களின் தேறிய பெறுமதிக்குரிய குறிப்பு இலக்கம் 07 இல் காட்டப்படும் தகவல்களிற்கு ஒப்பீட்டு ரீதியான தகவல்களை சமர்பித்திருக்கவில்லை. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் குறிப்புகளில் காண்பிக்கப்பட்டுள்ள உருப்படிகளிற்கும் ஒப்பீட்டு ரீதியான தகவல்களை சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் 36 ஆம் பந்தி பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் இருப்புக்களுக்கு உரியதாக பயன்படுத்திய கிரய சூத்திரம் உள்ளடங்களாக இருப்புக் கணிப்பீட்டின் போது பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கையை வெளிப்படுத்தி இருக்கவில்லை. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன் பிரகாரம் பிற்போடப்பட்ட வரி பெறுமதி (Deferred Tax) நிதிக்கூற்றுக்களில் இனங்கண்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 57(c) பந்தி பிரகாரம், ஊழியர் பணிக்கொடை ஓதுக்கத்தின் கீழ் நடைமுறை சேவைக் கிரயம் மற்றும் தேறிய வரைவிலக்கண நலன்கள் பொறுப்பின் மீது தேறிய வட்டியை, வருமான கூற்றில் இனங்காண வேண்டியதுடன் ஆயுள்கணிப்பீட்டு மதிப்பீட்டு அறிக்கையில் கணிக்கப்பட்ட பெறுமானங்களின் அடிப்படையில் பெறுமதிகள் இனங்காணப்பட வேண்டும். மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களில் பணிக்கொடை ஒதுக்காக இனங்கண்டிருந்த பெறுமதி மற்றும் ஆயுள்கணிப்பீட்டு மதிப்பீட்டு அறிக்கை பிரகாரம் ரூபா 4,166,215 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 57(d) பந்தி பிரகாரம் ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் இனங்காண வேண்டிய ஆயுள் கணிப்பீட்டு நட்டம் (Actuarial Loss) ரூபா 4,068,410 தொகை இலாப நட்டக் கணக்கில் இனங்கண்டுள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 139 பந்தி பிரகாரம் ஓய்பூதிய பணிக்கொடை ஒதுக்கம் ஒழுங்கான முதலீட்டு திட்டத்தின் பிரகாரம் முதலீடு செய்ய வேண்டிய போதும் மீளாய்வாண்டு இறுதித் திகதியன்று ஓய்வூதிய பணிக்கொடை ஒதுக்கக் கணக்கில் ரூபா 38,953,602 ஆன மீதிக்கு நேரொத்ததாக எவ்வித முதலீடும் செய்திருக்கவில்லை. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் ஒழுங்கான முதலீட்டுத் திட்டமொன்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 மோடார் வாகனங்களை திருத்த மேற்கொண்ட ரூபா 862,450 செலவை மோடார் வண்டிக் கணக்கிற்கு வரவு வைத்து குறித்த பெறுமதிக்கு பெறுமானதேய்வு செம்மையாக்கிய காரணத்தால் மீளாய்வாண்டில் இலாபம் ரூபா 713,556 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ரூபா 862,450 செலவு குறித்த மோடார் வண்டியின் இயந்திர திருத்தமாகையால் பயனுள்ள ஆயுட்காலம் கவனிக்கத்தக்க அளவு வருடங்களால் அதிகரித்துள்ளதால், குறித்த செலவை இவ்வாறு மூலதனமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. | மீண்டுவரும் செலவொன்றாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது 2019 ஆண்டில் கூட்டுத்தாபனத்தில் இருந்த 02 மோடார் வண்டிகளின் திருத்தத்திற்காக மேற்கொண்ட ரூபா 693,770 ஆன செலவு அவ்வாண்டிலேயே மூலதனமாக்கப்பட்டதால் அதற்கான ரூபா 138,754 ஆன பெறுமானதேய்வு கிரய பெறுமானத்தில் இருந்து ஆண்டு இலாபத்தில் குறைந்துள்ளதாக அவதானிக்கப்பட்டது. | ரூபா 693,770 ஆன மோடார் வண்டி திருத்த செலவு மூலதனமாக்கப்பட்டது அச் செலவு குறித்த மோடார் வண்டிகளின் மொத்த இயந்திர திருத்தத்திற்கு செலவிட்டுள்ளதால் ஆகும். அதன் பிரகாரம் இங்கு குறிப்பிடுவது போல் ரூபா 138,754 பெறுமானத்தினால் இலாபத்தில் குறைவொன்று ஏற்படவில்லை. | மீண்டுவரும் செலவொன்றாக கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.5.4 கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அன்மித்த கடந்த 05 ஆண்டுகளில் அதாவது 2016 முதல் 2020 வரையான காலத்தினுள் அரச மானியத்தை கவனிக்காது கடந்த 05 ஆண்டுகளில் கூட்டுத்தாபன நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட நட்டம் பின்வருமாறு ரூபா 134 மில்லியனிலிருந்து ரூபா 102 மில்லியன் வரையான வீச்சளவை கொண்டிருந்தது. இதன் பிரகாரம் மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை சவாலாக இருப்பதாக அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | தாமதமின்றி கூட்டுத்தாபனத்தை இலாபகரமான நிலைக்கு |

கொண்டு வர வேண்டும்.

| ஆண்டு | நட்டம் | அரச மானியம் (மீண்டெழும்) | அரச மானியம் (மூலதன) | வருமானமாக இனங்கண்ட அரச மானியம் (மூலதன) | அரச மானியம் அல்லாத நட்டம் |
|---|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | 1 | 2 | 3 | 4 | 1-2-4 |
| 2016 | (36,525,411) | 48,000,000 | 40,000,000 | 31,181,987 | (115,707,398) |
| 2017 | (42,335,722) | 54,000,000 | 54,000,000 | 34,025,205 | (130,360,927) |
| 2018 | (39,642,728) | 50,000,000 | 66,520,000 | 35,263,122 | (124,905,850) |
| 2019 | (30,185,251) | 60,000,000 | 70,000,000 | 44,615,174 | (134,800,425) |
| 2020 | (10,885,647) | 60,000,000 | 84,650,000 | 31,426,876 | (102,312,533) |

### 1.5.5 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| | விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | கடந்த 7 ஆண்டுகளாக ஏனைய செலுத்த வேண்டிய செலவின் கீழ் காட்டப்பட்டுள்ள நிவாரண கொடுப்பனவு மற்றும் பயிர் காப்புக் கொடுப்பனவு, உறுதி செய்து கொள்ள முடியுமான எவ்வித எழுத்துமூல சான்றுகளும் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாததுடன் அம் மீதியிலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 2,760,587 தொகையொன்று உரிமை மாற்றக் கூற்றில் திரண்ட நட்டத்திலிருந்து குறைக்கப்பட்டிருந்தது. | 3,602,678 | நிவாரண கொடுப்பனவு மற்றும் பயிர் காப்புக் கொடுப்பனவுகளிற்குரிய விண்ணப்பம். | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | செலவுகளிற்காக எழுத்மூல சான்றுகளை பேணிக் கொள்ள வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அப்போது இருந்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு ரூபா 9,466,200 ஆன மரமுந்திரிகை பயிர்களை வழங்கி 08 ஆண்டுகள் கடந்திருந்த போதும் நானாவித கடன்படுனராக கணக்கீடு செய்துள்ள அக் கடன் மீதியை குறித்த அமைச்சு தற்போது மூடப்பட்டுள்ளதால் அறவிடுவது நிச்சமற்றதாவதுடன் அக் கடன் மீதிக்காக ஐயக்கடன் மற்றும் ஐயக்கடன் ஒதுக்கம் மேற்கொள்ளவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | பெற வேண்டிய மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். ஐயக்கடன் மற்றும் ஐயக்கடன் ஒதுக்கம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 07 ஆண்டுகளை விஞ்சிய நெல் விற்பனை சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 3,500,000 கடன் தொகை மற்றும் அதற்குரிய வட்டி ரூபா 927,500 தொகை மீளாய்வாண்டில் செலுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | கடன் தொகை மற்றும் வட்டியை தீர்க்க வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 இன் 24 இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் | 2011 ஆண்டு முதல் வருமான வரி செலுத்த மற்றும் வருமான வரி அறிக்கை சமர்ப்பிக்க நடவடிகக்கை எடுத்திருக்காத போதும் அக்காலப் பகுதிக்குரிய ரூபா 779,483 ஆன நிறுத்திய வரி (WHT) பெற வேண்டிய மீதியாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நிலுவை வருமான வரி செலுத்தல் மற்றும் நிறுத்தல் வரி தொடர்பாக சரியான சீராககம், நிதிக்கூற்றுக் களில் உள்ளடக்க வேண்டும். |
| (ஆ) | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 18 ஆம் பிரிவு | பட்டியலில் குறிப்பிடும் திகதி முதல் முப்பது நாட்களினுள் கணக்காய்வு கட்டணத்தை தீர்க்க வேண்டிய போதும் 2005 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரையான காலத்திற்குரிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 2,189,211 தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நிலுவை கணக்காய்வுக் கட்டணத்தை தீர்க்க வேண்டும. |
| (இ) | 2012 ஜுலை 24 திகதிய பொது முயற்ச்சிகள் தொடர்பான செயற்குழு தீர்மானம் | கூட்டுத்தாபனத்திற்கு சட்டரீதியான உரிமையற்ற காணிகளில் சட்டரீரியான உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு பொது முயற்ச்சிகள் செயற்குழுவினால் அறிவித்திருந்த போதும், பிரதேச செயலகம் மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினூடாக மரமுந்திரிகை பயிரிட வழங்கியுள்ள மரமுந்திரிகை பயிரிடும் 11,363 ஏக்கர் காணியை சட்டரீதியாக உரிமையை கூட்டுத்தாபனத்திற்கு சுவீகரிப்பதற்குரிய நடவடிக்கை இவ்வறிக்கை திகதி வரை பூர்த்தி செய்திருக்கவில்லை. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | குறித்த செயற்குழு தீர்மானம் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு சட்டரீதியான உரித்தற்ற காணிகளின் உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2003 ஜுலை 02 இன் PED/12 இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களில் கட்டுப்பாட்டு சபையினால் அங்கீகரித்த நிதிக்கூற்று | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்படவில் | குறித்த சுற்றறிக்கை ஆலோசனை |

| | | |
|---|---|---|
| கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்கப்பட வேண்டிய போதும் 01 ஆண்டு 10 மாத தாமதத்தின் பின்னர் 2023 சனவரி 31 திகதி 2020 ஆண்டிற்குரிய இருதிக் கணக்குகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்கப்பட்டிருந்தது. | லை. | பிரகாரம் நிதிக்கூற்றுக் கள் சமர்பிக்கப்பட வேண்டும். |

**1.8 நிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் அரச மூலதன மானியம் (Capital Grant) ஆக ரூபா 84,650,000 கிடைத்து அதில் ரூபா 23,022,359 மரமுந்திரிகை மற்றம் தெங்கு பயிர்ச் செய்கையின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது. அந்த மூலதனமாக்கப்பட்ட பெறுமதிக்கு கிட்டிய அளவான ரூபா 23,594,880 தொகை மீண்டுவரும் செலவாக செலவிடப்பட்டிருந்தது. ஆண்டிறுதியில் ரூபா 38,032,761 தொகை மீதியாக இருக்க வேண்டிய போதும் அத் திகதியில் கணக்கில் இருந்த மீதி ரூபா 4,045,075 ஆனது. அதன் பிரகாரம் மூலதன மானியத்திலிருந்து ரூபா 33,987,686 தொகை வேறு நடவடிக்கைகளுக்கு செலவிட்டுள்ளதாக அதவானிக்கப்பட்டது. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | அரச மூலத மானியம் அந் நோக்கத்திற்காக ஈடுபடுத்த வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 10,885,647 ஆன நட்டமாக காணப்பட்டதுடன் அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் நட்டம் ரூபா 30,185,251 ஆகும். அதன் பிரகாரம் நிதி பெறுபேறுகளில் ரூபா 19,299,604 ஆன நட்டத்தில் குறைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த நட்டத்திலான குறைவிற்கு ஏனைய செலவினம் குறைவடைந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் புத்தளம் மற்றும் கமன்தழுவ ஆராயச்சி மத்திய நிலையத்திற்காக மூலதன மானியத்தின் கீழ் ரூபா 4,000,000 செலவிட்டிருந்த போதும், மீளாய்வாண்டினுள் எவ்வித புதிய ஆராய்ச்சியும் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் இரண்டு மத்திய நிலையங்களில் கடந்த ஆண்டுகளிலிருந்து முன் வரப்பட்ட 08 ஆராய்ச்சிகள் மாத்திரம் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. மேலும் ஆராய்ச்சிகளின் முன்னேற்றத்தை மதிப்பிடக் கூடியவாறு தொடரந்து மற்றும் முறையான முன்னேற்ற அறிக்கை பேணுதலும் செய்திருக்கவில்லை. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | புதிய ஆராய்ச்சி, ஆரம்பித்தல் ஆரம்பித்த ஆராய்ச்சிகளை பூர்த்தி செய்தல் மற்றும் ஆராய்ச்சி முன்னேற்றம் தொடர்பாக அறிக்கை பேணுதல் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பயிர் நடுகைக்கு தேவையான பொலிதீன் உறைகளை கொள்வனவு செய்யும் பெறுகையை சரியாக திட்டமிட்டு வழங்குனர்களிற்கு விலைகளை முன்வைக்க போதிய காலமொன்றை வழங்கி இருக்காததனால் குறித்த பெறுகைக்காக இரு முறை விலைமனு கோரி சரியான மாதிரியை முன்வைக்காத வழங்குனரிற்கு ரூபா 2,393,610 ஆன பெறுகையை ஒப்படைத்திருந்ததாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | 2020 ஆண்டில் மரமுந்திரிகை பயிர் மேடைகளுக்கு தேவையான பொலிதீன் உறைகளை கொள்வனவு செய்ய முத்திரையிட்ட விலைமனு கோரியதுடன், கொரோனா தொற்று நிலைமை காரணமாக விலை மனு சமர்பிக்க மட்டுப்படுத்தப்பட்ட நாட்கள் வழங்கப்பட்டது. அம் முதலாம் முறை விலைமனு கோருகையில் கிடைத்திருந்தது ஒரு விலை மனு மாத்திரமே ஆவதுடன், அதன் பிரகாரம் விலை ஒப்பிட மீண்டும் மட்டுப்படுத்தப்பட்ட நாட்கள் வழங்கி விலை மனு கோர இரண்டாம் சந்தர்ப்பத்தில் 06 விலைமனு கிடைத்து அவர்களின் விலைமனுவுடன் அவர்கள் வழங்கும் பொலிதீன் உறைகளின் மாதிரி தொழிநுட்ப ஆய்வுக் குழுவிற்கு முன்வைத்ததன் பின்னர் முறையாக விலைமனுதாரர் ஒருவரை தெரிவு செய்து பெறுகையை ஒப்படைத்துள்ளதாக இங்கு விடயங்களை குறிப்பிடுவதனை ஏற்க முடியாது. | பெறுகைகள் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | பெறுமதி ரூபா 6,747,974 ஆன கடன்படுனர்களின் வயது பகுப்பாய்வின் பிரகாரம் 90 நாட்களிற்கு அதிக காலமொன்றிற்கான கடன் மீதியாக ரூபா 2,092,275 மற்றும் 61 – 90 நாட்களிற்கு இடையிலான காலத்தின் கடன் மீதியாக ரூபா 485,512 ஆன கடன் மீதிகள் காணப்பட்ட போதும் அவற்றை அறவிட முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | கடன்படுனர் மீதிகளை அறவிட முறையான நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மரமுந்திரிகை ஏற்றுமதி கிராமங்களை உருவாக்கும் கருத்திட்டதின் மூலம் 100,000 ஒட்டு மரமுந்திரிகை கன்றுகளை உற்பத்தி செய்து விநியோகிகப்பட்டிருந்தன. அது தொடர்பாக வடக்கு மாகாணத்தில் மற்றும் அநுராதபுர மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலக பிரிவுகளில் மேற்கொண்ட எழுமாறான கன்று கணிப்பீட்டின் போது நாற்றியுள்ள கன்றுகளின் எண்ணிகையில் அநுராதபுர மாவட்டத்தில் 30 சதவீதமும், வவுனியா மாவட்டத்தில் 34.5 சதவீதமும், முள்ளைதீவு மாவட்டத்தில் 04 சதவீதமும் மற்றம் கிளிநொச்சி மாவட்டத்தில் 63 சதவீதமுமாக கன்றுகள் தோல்வியடைந்திருந்தன.<br>கணிப்பீட்டிற்குட்படுத்திய மட்டுப்படுத்தப்பட்ட பிரதேசத்தினுள் மாத்திரம் 1560 கன்றுகள் தோல்வியடைந்து இருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 390,000 ஆனது. கன்றுகளை நடும் போது சாதாரண வீணாகல் 6 சதவீதத்தை கவனிக்கையில் அது அதிகூடிய பெறுமானம் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவத்தினால் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | மரமுந்திரிகை ஏற்றுமதி கிராமங்களை உருவாக்கும் போது கருத்திட்டத்தை சிறந்த முறையில் மேற்பார்வை செய்ய வேண்டும். |